செய்தி வெளியீடு எண்: 108 நாள்: 02.02.2011.

## தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
## சென்னை –28

சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி நடத்தும் தமிழிசை விழா 09.02.2011 புதன் கிழமை முதல் 11.02.2011 வெள்ளிக்கிழமை வரை இசைக் கல்லூரி வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கில் நடைபெற உள்ளது.

09.02.2011 அன்று காலை 11.30 மணிக்கு நடைபெற உள்ள தொடக்க விழாவில் கலை பண்பாட்டு இயக்கக ஆணையர் திரு. ப.அ. மணி., இ.வ.ப., அவர்கள் தலைமையேற்று 7 இசை மேதைகளுக்கு கலைநிறை வித்தகர் விருதுகள் வழங்கவும் , கலை பண்பாட்டு இயக்கக துணை இயக்குநர் திரு. வ. ஜெயபால் அவர்கள் சிறப்புரையாற்றவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்

இவ்விழாவில் காலை 9.00 மணிக்கு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி நாதசுர, தவில் துறை மாணவர்களின் மங்கள இசை வழங்கவும், 10.00 மணி முதல் மேலாண்மை இயக்குநர் , டி.என்.பி.எல் திரு. டி.கே. ராமசந்திரன், இ.ஆ.ப., அவர்களின் குரலிசை நிகழ்ச்சியும் 12.00 மணிக்கு "கலைமாமணி" திருமதி பார்வதி ரவி கண்டசாலா அவர்கள் வழங்கும் " பெண்மைச்சுடர்" எனும் நாட்டிய நாடகமும், திருமதி விசகா ஹரி அவர்கள் வழங்கும் நந்தனார் சரித்திரம் இசை பேரூரையாற்றவும் 10.02.2011 அன்று இரண்டாவது நாள் நிகழ்ச்சியாக காலை 10.00 மணிக்கு கலைமாமணி டாக்டர் நர்மதா அவர்களின் வயலின் இசை நிகழ்ச்சியும், 11.30 மணிக்கு தோப்பூர் திரு.பி.சாய்ராம் அவர்களின் குரலிசை நிகழ்ச்சியும், 2.30 மணிக்கு திருமதி ரமாவெங்கடராமன் அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியும், மூன்றாவது நாள் நிகழ்ச்சியாக காலை 10.00 மணிக்கு காருக்குறிச்சி திரு. ஏ.பாலாஜி அவர்களின் வீணை இசை நிகழ்ச்சியும், 11.30 மணிக்கு பரதகலா கேந்திராவின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் 2.00 மணிக்கு குருகுலம் அகடமி வழங்கும் பரதநாட்டிய நிகழ்ச்சியும் 3.00 மணிக்கு " ராகம் சகோதரிகள்" **வி.**சிவரஞ்சனி மற்றும் வி. நளினகாந்தி அவர்களின் குரலிசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

**<u>கலைநிறை வித்தகர் விருது பெறும் இசை மேதைகள்</u>**

1) “சங்கீத கலாநிதி “ திருமதி ஆர். வேதவல்லி, அவர்கள்

2) “கலைமாமணி“திரு. ஆர். வி. கிருஷ்ணன், அவர்கள்

3) இசையியல் பேரறிஞர் முனைவர் கே. ஏ. பக்கிரிசாமி பாரதி அவர்கள்

4) “கலைமாமணி“திரு. இ.எம். சுப்ரமணியம், அவர்கள்

5) திரு. நடனசிகாமணி அவர்கள்

6) “கலைமாமணி“.செம்பொனார் கோயில்
திரு. கு.கல்யாணசுந்தரம் அவர்கள்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**